**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.45-2017 **L.W.7** **P.W.6**

| Name | பாலமுருகன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | கருப்பையா | Calling | |
| Village | இறையூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 45 |
| District | கடலூர் | Time | 12.50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 16.12.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

***<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>***

*1.* நான் இறையூரில் குடும்பத்துடன் வசித்து கட்டிய தொழிலாளியாக வேலைசெய்து வருகி– றேன். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்த ஜெயராமனை தெரியும். அவர் எனது மாமா ஆவார். அ.சா.1 வேல்முருகன்அவருடைய மகன், அசா.2 செல்வி ஜெயராமனின் மனைவி ஆவார். மற்ற சாட்சிகளை தெரியும். எதிரி வெங்கடேசனைதெரியும்.( எதிரி ஆஜரில்லை). என் மாமா ஜெயராமன் பாலத்தில் கரும்பு லாரி மோதி இறந்ததாகத்தான்தெ தரியும் வேறு எதுவும் தெரியாது. சம்பவம் எப்படி நடந்தது என்று தெரியாது. போலிஸார் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் சாட்சி முன்னிலையில் பிரேத விசாரணை மேற்க்கொண்டு பிரேத விசாரணை சாட்சியாகவும், வழக்கு சம்மந்தப்பட்ட இரு வாகனங்களின் பதிவெண் மற்றும் சம்பவ மாதம், தேதி, வருடம், நேரம் மற்றும் எதிரியின் பெயர் ஆகியவற்றை பொருத்து போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்ச்சமயம் மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு கோரிக்கை ஏற்க்கப்பட்டு இ.சா.ச.பி 154(1) ன் ( பிஎண்.எஸ்.எஸ் 157(1) ) கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரனை**

*1.* போலிஸார் விசவாரணையில் என் மாமா சம்பவ இடத்திற்கு சென்ற தேதி 10 மாதம் 3, சம்பவ நேரம் மாலை 6.05 என்று போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றால் ? சா– ரிதான்.

2. போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமா ஓட்டிசென்ற இருச்சக்கர வாகனம் TVS - XL-100 பதிவெண்TN-91-X-5986 என வாக்குமூலம்கொடுத்துள்ளேன் என்றால் ? சா–ிதான்.

3, போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமா எதிர் திசையில் வந்த கரும்பு லா–ியின் பதிவெண் பதிவெண்TN-29-AZ-4205 என வாக்குமூலம்கொடுத்துள்ளேன் என்றால் ? சா–ிதான்.

4. போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமாவுக்கு எதிர் திசையில் வந்த கரும்பு லாரியின் ஓட்டுனர் பெண்ணாடத்தை சேர்ந்த சுப்பரமணியன் மகன் வெங்கடேசன் என வாக்குமூலம்கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான்.

5. சம்பவம் நடந்த ஏழு ஆண்டுகாலம் ஆகிவிட்டதால் மேற்கண்ட சங்கதிகளை நினைவு கூர்ந்து சாட்சியம் அளிக்க மறந்துவிட்.டேன். வேறு எந்த காரணத்திற்காகவும் சாட்சியம் அளிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் ? சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி பற்றி காவல் நிலையத்தில் சொன்னதின் பெயரில்தான் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். வழக்கு சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் ? சரிதான். வழக்கில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களின் பதிவெண்கள் திட்டக்குடிக்கு வரும்போதுதான் தெரிந்துகொண்டேன். திட்டக்குடியில் காவல் துறையினர்சொல்லித்தான் தெரிந்துகொண்டேன். திட்டக்குடி அரசு மருத்துவமனையில் வைத்துதான் கையொப்பம் வாங்கினார்கள் நான் கையொப்பம் செய்த நேரம் நினைவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக என்னுடைய மாமா சார்பாக இழப்பீடு பெற்றுவிட்டார்களா என்றால் ? அதை பற்றி தெரியாது. விபத்து இறந்துபோனவர் என்னுடைய மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT

JUDICIAL MAGISTRATE,
THITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.45-2017 **L.W.8** **P.W.5**

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முக நாதன் | Caste | |
| Father/Husband Name | சுப்பரமணியன் | Calling | |
| Village | இறையூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 67 |
| District | கடலூர் | Time | 12.10 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 16.12.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

*1.* நான் இறையூரில் குடும்பத்துடன் வசித்து விவசாய வேலைசெய்து வருகிறேன். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்த ஜெயராமனை தெரியும். இவ்வழக்கின் மற்ற பட்டியல் சாட்சிகளை தெரியும். எதிரி வெங்கடேசனை தெரியாது ( எதிரி ஆஜரில்லை). கடந்த 2017 ம் வருடம், தேதி ஞாபகமில்லை. இறையூரில் உள்ள சர்க்கரை ஆலை மேம்பாலத்தில் ஜெயராமனுக்கு விபத்து ஏற்பட்டது. நேரம் நினைவில்லை. தற்போது எனக்க இதயத்திற்கு ஆஞ்சி–யோ செய்ததால் நினைவில்லை. இந்த வழக்கு சம்பவம் எப்படி நடைபெற்றது என்று எனக்கு தொ–ியாது. தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்டும பார்வை மகசரில் உள்ள முதல–ாவதுகையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அசா.ஆ.2** ஆகும். மேற்ச்சொன்ன கையொப்பத்தை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்துபோட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் சாட்சி முன்னிலையில் போலிஸார் சம்பவ இடத்தை பார்வையிட்ட தேதி, நேரம் மற்றும் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் இட்டுவிட்டு கையொபத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்ற சங்கதிகளை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு கோரிக்கை ஏற்க்கப்பட்டு இ.சா.ச.பி 154(1) ன் ( பிஎண்.எஸ்.எஸ் 157(1) )கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரனை**

*1.*கடந்த 11–03–2017 ம் தேதி காலை 7.00 மணிக்கு நானும், பட்டியல் சாட்சி இரத்தி–

னசபாபதி என்பவரும் சம்பவம் நடந்த இடமான இறையூர் மேம்பாலத்தின் அருகே நின்றுகொண்டிருந்ததாகவும், பெண்ணாடம் போலிஸார் அங்குவந்து 10–03–2017 அன்று ஜெயராமனுக்கு வாகன விபத்து நடந்தது சம்மந்தமாக இருவாகனங்களின் பதிவெண்களையும், எதிரியின் பெயரையும் கூறி எங்கள் இருவர் முன்னிலையில் அதே இடத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார்செய்து எங்களிடம் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்று சொன்னால் ? சரிதான்.

2. முதல் விசாரணையில் இவ்வாறு **அ.சா.ஆ.2** கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என தவறுதலாக சொன்னதற்க்கான காரணம் இருதய நோய்க்காக ஆஞ்சியோ சிகிச்சைதான் காரணம் என்றால் ? சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இரத்தின சபாபதியும் நானும் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் போட்டோம் என்று சொன்னால்? முதலில் அப்படித்தான் சொன்னேன் ஞாபக மறதி காரணமாக அவ்வாறு சொன்னேன். இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரிட்டு பார்க்கவில்லை என்றால் ? சரிதான் ஆனால் வழக்,கு சம்பவம் பற்றிதெரியிம். என்னுடைய கையொப்பம் உள்ள **அ.சா.ஆ.2** உள்ள தாளில் எழுதப்பட்ட விவரத்தை போலிஸார் என்னிடம் தெரிவித்தார்கள். எழுதிய தாளில்தான் **அசா.ஆ.2** கையொப்பத்தை நான் இட்டேன். என்னிடம் கையொப்பம் வாங்கிய காவலர்களின் பெயர் நினைவில்லை. **அ.சா.ஆ.2** கையொப்பத்தை சம்பவ இடத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன். அங்கு நான்செல்லவேண்டிய அவசியமில்லை என்றால் ? சரியல்ல. நான் டீ குடிக்க சென்றிருந்தேன். சம்பவ இடத்திற்கு அருகாமையில் உள்ள சர்க்கரை ஆலையில் எப்போதுமே 100 முதல் 150 வரை மக்கள் இருப்பார்கள். சம்பவத்தன்ற சர்க்கரை ஆலை ஓடிக்கொண்டிருந்தது என்றால் ? சரிதான்.

2. நான் இரண்டாவதாக சொன்ன சம்பவ இடத்தில் கையொப்பம் போட்டேன் என்பது தான் உண்மை. நான் கையொப்பம் போடும்போது ரத்தின சபாபதியும் உடனிருந்தார். இரத்தினசபாபதியும், நானும் ஜெயராமனுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம்போட்டேன் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT

JUDICIAL MAGISTRATE,
THITTAGUDI

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.45-2017 **L.W.5** **P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | கர்ணன் | Caste | |
| Father/Husband Name | ராமச்சந்திரன் | Calling | |
| Village | இறையூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 47 |
| District | கடலூர் | Time | 11.45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 16.12.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

***<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>***

*1.* நான் இறையூரில் குடுபத்துடன் வசித்து சென்டரிங் வேலைசெய்து வருகிறேன். இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த ஜெயராமன் எனக்கு மாமனார் ஆவார். அ.சா.1 வேல்முருகன் என் மனைவியின் தம்பி ஆவார். அ.சா.2 செல்வி ஜெயராமனின் மனைவி ஆவார். மற்ற சாட்சிகளை எனக்கு தெரியும். எதிரி வெங்கடேசனை தெரியாது ( எதிரி ஆஜரில்லை). கடந்த 2017 ம் வருடம் தேதி, மாதம் மறந்துவிட்டேன். மதியம் 12.00 மணியளவில் எனது மாமனார் இறையூரில் இருந்து பெண்ணாடத்திற்கு சாமான்கள் வாங்குவதற்காக தன்னுடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றார். என் மாமனாரின் வாகனத்தின் பதிவெண் தொ–ியாது அப்போது எதிரி திசையில் கரும்பு ஏற்றிக்கொண்டு ஒரு லாரி வந்தது அந்த லாரி என் மாமனார் மீது மோதிவிட்டது. பின்னர் விபரம் அறிந்து பெண்ணாடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதித்து என்மாமானார் இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் பெண்ணாடம் போலிஸார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். இது சம்மந்தமாக அ.சா.1 வேல்முருகன் பெண்ணாடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என் மாமனார் மீது மோதி கரும்பு லாரியின் பதிவெண் ஏழு வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது நினைவில்லை.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் சாட்சி முன்னிலையில் பிரேத விசாரணை மேற்க்கொண்டு**

**பிரேத விசாரணை சாட்சியாகவும், வழக்கு சம்மந்தப்பட்ட இரு வாகனங்களின் பதிவெண் மற்றும் சம்பவ மாதம், தேதி, நேரம் மற்றும் எதிரியின் பெயர் ஆகியவற்றை பொருத்து போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்ச்சமயம் மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு கோரிக்கை ஏற்க்கப்பட்டு இ.சா.ச.பி 154(1) ன் ( பிஎண்.எஸ்.எஸ் 157(1) ) கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரனை**

*1. போ*லிஸார் விசவாரணையில் என் மாமானர் சம்பவ இடத்திற்கு சென்ற தேதி 10 மாதம் 3, சம்பவ நேரம் மாலை 6.05 என்று போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றால் ? சா–ிதான்.

2. போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமனர்ஓட்டிசென்ற இருச்சக்கர வாகனம் TVS - XL-100 பதிவெண்TN-91-X-5986 என வாக்குமூலம்கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான்.

3, போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமனாருக்கு எதிர் திசையில் வந்த கரும்பு லாரியின் பதிவெண் பதிவெண்TN-29-AZ-4205 என வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான்.

4. போலிஸ் விசாணையில் சம்பவ சமயத்தில் எனது மாமனாருக்கு எதிர் திசையில் வந்த கரும்பு லாரியின் ஓட்டுனர் பெண்ணாடத்தை சேர்ந்த சுப்பரமணியன் மகன் வெங்கடேசன் என வாக்குமூலம்கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான்.

5. சம்பவம் நடந்த ஏழு ஆண்டுகாலம் ஆகிவிட்டதால் மேற்கண்ட சங்கதிகளை நினைவு கூர்ந்துசாட்சியம் அளிக்க மறந்துவிட்.டேன். வேறு எந்த காரணத்திற்காகவும் சாட்சியம் அளிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் ? சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் ? சரிதான். சம்பவ இடமான மேம்பாலத்தில் இறங்கும் வழியில் ஐந்து தொலைவில் இடது புறமாக வளைந்து சர்கரைஆலைக்கு செல்லவேண்டும் என்றால் ? சரிதான். என்மாமனாருக்கு குடிபழக்கம் உண்டு என்றுசொன்னால் ? சரியல்ல. சமப்வ சமயத்தில் மது போதையில் இருந்தார் என்றால் ? சரியல்ல. என்னுடைய மாமன–ாருக்கு செல்லுபடியாக கூடிய ஓட்டுனர் உரிமம்இல்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கிற்கு எனது மாமனார் தான்காரணம் என்றாலும், இரக்கத்தில் கரும்பு லாரி மெதுவாகத்தான் வந்தது எனது மாமனார்தான் இருச்சக்கர வாகனத்தை ஒழுங்காக ஓட்டாமல் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் ? சரியல்ல. இவ்வழக்கு சமப்வ சம்மந்தமாக மோட்டார் வாகன இழப்பீடுடீபெற்றுவிட்டோம் என்றால் ?சரிதான்., எதிரியின் பெயர் போலிஸார் சொல்லித்தான் தெரியும்என்றால் ? சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்தவர்கள் எதிரியின் பெயரை

எனக்கு தெரிவித்தார்கள். எனக்கு எதிரியின் பெயர் நேரிட்டு தெரியாது என்றால்? சரிதான். சம்பவம் நடந்த அன்று 6.30 மணிக்கு திட்டக்குடி அரசு மருத்துவமனையிரல் போலிஸார் என்னை விசாரித்தார்கள். வழக்கு சம்பவ தேதி, மாதம், ஆண்டு, நேரம் ஆகியவை போலிஸார் சொல்லித்தான் தெரியும் என்றால்? சரியல்ல. எனக்கே சம்பவ தேதி, நேரம் ஆகியவற்றை சம்பவத்தன்றே தெரியும். இவ்வாறுஏழு ஆண்டுகாலம் ஆகவிட்டதால் முதல்விசாரணையில் சாட்சியம் அளிக்க மறந்துவிட்டேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால்? சரியல்ல. எனக்கு ஓரளவிற்கு எழுத, படிக்க தெரியும். என்னுடைய பிறந்த தேதி 09–06–1976 ஆகும். சம்பவம் நேரிட்டுதெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவர் என்னுடைய மாமனார் என்பதால் அரசு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல. கரும்புலாரியின பதிவெண் எனக்கு சம்பவத்தன்றே தெரியும் நான் மறந்து விட்டேன் பிறகு வழக்கு ஆவணங்கள் மூலமாக தெரிந்துகொண்டேன்.

TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT

JUDICIAL MAGISTRATE,
THITTAGUDI